*1999 மார்ச் 23]* [திரு. துரைமுருகன்]

தாமரைக்கனி அவர்கள், வெளியிலே சென்று உண்மைக்கு மாறான ஒரு குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார். அதிலே என்னுடைய பெயரையும் இழுத்திருக்கிறார். தாய் எட்டு அடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாயும் என்பதைப்போல, தலைமை அவ்வளவு பெரிய பொய் சொன்னால், அதையும் விஞ்சுகிற பொய்யை அவர் சொல்லி இருக்கிறார். நேற்றைக்கு இங்கு நடந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தாக்கப்பட்டு, வடிகின்ற இரத்தத்தைத் துடைத்துக்கொண்டு, காயம்பட்ட அவரை அழைத்துக்கொண்டு போகின்ற அந்தப் பணியை நான் செய்து கொண்டிருந்தேன். இங்கிருக்கிற அதிகாரிகளும் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற, மாண்புமிகு தலைவர்களும், மற்றவர்களும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், கொஞ்சங்கூட சம்பந்தா சம்பந்தமில்லாமல், இங்கிருந்து அவருடைய கழுத்தை நெரித்து, குலைத்து, ‘தொலைந்து போ’ என்று சொன்னேன் என்றால், என் கை என்ன பதினாறு அடி நீளமா, பதினேழு அடி நீளமா இருக்கிறது. இப்படிப்பட்ட பொய்யையே அரசியல் மூலதனமாகக் கொண்டு, ஒரு தலைவி, அதற்கேற்ப ஓர் உறுப்பினர், உண்மைக்கு மாறான கருத்தை வெளியிலே தெரிவித்திருக்கிறார். எனவே, நேற்று நடந்த சம்பவத்தில் வீணாக, உண்மைக்கு மாறாக அவர் என்னுடைய பெயரைக் கெடுத்திருக்கிறார் என்பதைத் தங்கள் மூலமாக நாட்டிற்கும், இந்த அவைக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் குற்றச்சாட்டு முழுக்க முழுக்கத் தவறானது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற தலைவர்கள் உணர்வார்கள். பத்திரிகையாளர்களும், தாங்களும் அறிவீர்கள். இதில் கொஞ்சம்கூட உண்மை எதுவும் இல்லை, பொய்யானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இதுகுறித்து தலைவர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர் திரு. தாமரைக்கனி கைது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. நேற்றையதினம் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களைக் கைது செய்கிற உத்தரவைப் பிறப்பிக்கப் போவதாகச் சொன்னேன். அதன்படி, என்னுடைய அறைக்குச் சென்று சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் அவர்களுக்கு ஓர் உத்தரவைப் பிறப்பித்தேன் திரு. தாமரைக்கனி அவர்களைக் கைது

[பேரவைத் தலைவர்] *[1999 மார்ச் 23*

செய்யவேண்டுமென்று. அந்த அடிப்படையிலே நேற்று மாலை 6¼ மணிக்கு திரு. தாமரைக்கனி அவர்கள் அப்போலோ மருத்துவமனையிலேயிருந்து கைது செய்யப்பட்டு, சென்னை பொது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே ஏராளமான மருத்துவர்களை வைத்து அவர் உடல் முழுவதும் பரிசோதனை செய்து, அதற்குப் பிறகு என்னுடைய அடுத்த உத்தரவின் அடிப்படையில் சென்னை மத்திய சிறையிலே அடைக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### (ஆ) பேரவையில் 22.3.1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நேற்று நடந்த அசம்பாவிதங்களை உறுப்பினர்கள் மட்டுமல்ல, இங்கே வந்திருந்த பார்வையாளர்கள், அரசு அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் எல்லோரும் பார்த்திருப்பார்கள். நியாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற காரணத்தால், நடவடிக்கைகளை இரண்டாகப் பிரித்துத்தான் செய்திருக்கிறோம். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்குத் தர இருக்கின்ற நேரத்தில் வெளிநடப்பு செய்ய முயற்சித்த நேரத்தில், அவர்களாகவே வெளிநடப்பு செய்யலாம் என்று சொன்னேன். அதையும் மீறி அவர்கள் இங்கேயே இருந்து, அதற்குப் பிறகு என்னுடைய உத்தரவின்பேரில் இங்கேயிருக்கிற காவலர்கள் அவர்களை வெளியேற்றினார்கள். ஆனால், அதற்கு அடுத்த நாளே சொன்னேன்; இது முதல் முறையானது; இரண்டாவது முறையென்றால், கூட்டத் தொடர் முழுவதற்கும் வெளியேற்ற வேண்டுமென்று விதி இருக்கிறது என்று. அதைப்போலவே, நேற்று திரு. தாமரைக்கனி அவர்களும், திரு. கருப்பசாமி அவர்களும் இந்த அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலே நடந்து கொண்டார்கள். ஒட்டுமொத்தமாக நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, ஒருமனதாக அந்தத் தீர்மானம் நிறைவேறி, அவர்கள் இருவருமே இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் இந்த அவையைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள்.

*முற்பகல் 10-55*

அதோடு இன்னொரு கருத்தையும் செல்கிறேன். விடுதியிலே அவர்கள் இருக்கக்கூடாது என்ற உத்தரவையும் போட்டேன். அதற்கு